# காலத்திற்கு ஒரு கவிஞன், கருத்துக்குப் பெருங் கவிஞன்!

கோவை உலா அந்தாதி
கோலமிலாத் தலபுராணம்
மாவைநன்கு
அரைப்பதுபோல்
மறுபடியும்
மறுபடியும்
தேவையிலாப் பொருள்பற்றித்
தெவிட்டுகின்ற
கற்பனைகள்,
பூவிதழ் அன்றன்றும்
பூத்தழகாய்த் தெரிவதுபோல்
பாவைத்தான் எழுதாமல்
பரம்பொருளும் அவர்அருளும்
பாவமும் புண்ணியமும்
பலபிறவி மாயைகளும்
பாவலர்கள் பாட்டெழுதிப்
பழையவழி போனகாலம்!

நோவைத்தான் மக்களின்
நொடியைத்தான்
போவத்தான் வைப்பதற்குப்
புதுவழி தேடியே
மேவத்தான் புரட்சியெண்ணம்
மிகவேகப் பாட்டெழதிக்
கூவத்தான் முடியாமல்
கூழுந்தான் கிடைக்காமல்
சாவத்தான் கிடந்தோரை,
சல்லடை ஆனோரை

ஏவத்தான் வந்தவர்
எழுச்சியைத் தந்தவர்
தூவத்தான் கருத்தென்னும்
துளிர்க்கின்ற விதைகளை
ஆவலால் எழுந்தவர்
ஆகாதெனும் அறியாமை
கேவலம் என்றுரைத்துக்
கிளர்ச்சிதரும் பாக்களைத்
தீவலம் செய்வதுபோல்
செந்தமிழில் ஏற்றியவர்;
பூவலம் வருவதுபோல்
போர்க்களம் புகுவதுபோல்
மாவளம் மிகவேண்டி
மக்களைத் தூண்டியவர்!
கோஇலா நாட்டில் பாக்
கோவாக மிளிர்ந்தவர்
மூவேந்தர்
மிடுக்குதான்
முகத்திலே பொலிந்திடப்
பாவேந்தர் ஆனவர்,
பாரதி தாசனவர்!

இந்திய விடுதலையை
எல்லோர்க்கும் உணர்த்திட
முந்திய பாரதியை
முன்ஏராய்க் கொண்டாலும்
சிந்தனை வேறாகத்
திகழ்ந்தவர்,
திராவிடம்
முந்திய காலத்து
முதன்மைபெற
முகிழ்த்தவர்!

மந்தநிலை மக்களிடம் மண்டிய
அறியாமை
சொந்தநிலை
உணராத
துயர்மடைமை மூடநிலை
கந்தையும் கிடைக்காமல்
கடவுளெனக் கிடந்தநிலை
மொந்தைக்கூழ் குடிக்கவும்
மொய்த்திருந்த பசித்தநிலை
பொந்தாக, புதராகப்
புறமெலாம்
சூழ்ந்திருக்க
வந்துபெருந் துயரளிக்க
வண்டமிழ் நாட்டிலே
இந்தநிலை மாற்றுவதே
இன்றைய தேவையெனச்
சிந்தித்துத் தோன்றிய
சீர்திருத்த இயக்கத்தின்
கொந்தளித்த கருத்துகள்
குமுறிட உள்ளத்தில்
செந்தழலாய் மாறியவர்;



செந்தமிழில் ஊறியவர்!
வந்தெழுந்த எண்ணங்கள்
வார்த்தெடுத்த
கலன்களை
வெந்தழல் ஓங்கிட
வேதனை தீர்ந்திடத்
தந்தவர் பாரதி
தாசனெனச் சாற்றுவோம்
கந்தகம்போல் புரட்சிக்
கவிஞரெனப் போற்றுவோம்!

இருட்டறையில் உள்ளதடா
உலகமென்று எழுச்சிகொள்
ஒருபாட்டால் தமிழ்நாட்டை
உலுக்கியவர்; ஊர்தோறும்
தெருத்தோறும் வீடுதோறும்
சீற்றத்தைக் கிளப்பியதால்
உருவான மாற்றங்கள்
ஒன்றல்ல, இரண்டல்ல!
பெருங்கொடுஞ்
சாதிமதம்
பேயாட்டம் போடுவதைக்
கருவறுக்க வேண்டுமென்றும்
காலமெலாம் சொத்துகளைச்
சுருட்டுகின்ற பேர்களைத்
தொலைத்திட வேண்டுமென்றும்
இருட்டொழிக்கும்
பேரொளியாய்
எழுவது பகுத்தறிவுப்
புரட்சியென்று
பாடியவர்
புத்துலகம் தேடியவர்
திரட்சியாய் உள்ளபல
தீமைகளை, கேடுகளை
விரட்டினால் மட்டுமே
விளைந்திடும் வளமென்றார்
மிரட்டுவோர் தமையெதிர்த்து
மேவுக களமென்றார்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

உரிமையெனும்
உணர்ச்சியை
உடையவராய்த் தமிழர்கள்
சரிநிகர் சமமாகத்
தலைநிமிர்ந்து
வாழ்வதற்குப்
பரியோட்டப் பாடல்கள்
பன்னூறு புனைந்தவர்
கரிகாலன் குட்டுவன்
கழல்மாறன் நினைந்தவர்
நரியான வடவர்கள்
நண்ணுவதே
சரியான வேலையென்றார்
தமிழ்நாடு சோலையென்றார்
புரியாத குரங்கோட்டப்
புறமெடுங்கள்
கோலையென்றார்!

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டை ஆளுதற்கு
அமைந்தவன் என்றிவர்
அன்றேதான் பாடியவர்
தமைமறந்து சிலநேரம்
தான்தோன்றித் தனமாக
இமைமூடி விடுகின்றார்
எவர்எவரோ ஆளுதற்கு
நமையண்டி வருகின்றார்
நாற்காலி பற்றுதற்குச்
சுமைசுமையாய்ப் பொய்கூறிச்
சுற்றியே திரிகின்றார்
சமயந்தான் இதுவென்று
சந்துவழி நுழைகின்றார்!

இமயத்தை வென்றவர்கள்
இனமானம் உயர்ந்தவர்கள்
தமர்அன்றிப் பிறர்வரின்
தடுத்தெழுவர்
தலைநிமிர்வர்
அமர்எனினும்
கொஞ்சமும்
அஞ்சாமல் வெல்லுவர்
திமிலுயர்ந்த ஏறுகளாய்த்
திறலுடன் செல்லுவர்!

தமிழர்கள் ஒருபோதும்
தலைகுனியார்
தாழ்ந்திடார்!
இமிழ்கடல்சூழ் தமிழ்நாடு
என்றைக்கும் தனித்திருக்கும்
தமிழரன்றி அயலவர்
தாள்வைக்க ஒழித்திருக்கும்!
குமிழிகள் அல்ல; அவர்
குன்றுகள், மோதினால்
உமியாவார் எதிரிகள்,
உருவில்லா உதிரிகள்!
கமழ்கவே இவ்வெண்ணம்
காலமெலாம் தமிழரிடம்!
சமுதாயப் பாவேந்தன்
தலைமுறைக்கும்
கோவேந்தன்
அமுதமாய்ப் பாடல்கள்
அளித்தவொரு மாவேந்தன்!

செந்தமிழ்க்குத்
தீமையெனின்
தீயாக எழுந்தவர்,
எந்தமொழி என்றாலும்
ஏலாதென்று உரைத்தவர்;
இந்திமொழி
என்றாலோ
இமயம்வரை விரட்டுகெனச்
சிந்துபல பாடியவர்
சிறுமையெனச் சாடியவர்!

சந்துபல கண்டது
தாள்வைக்க முயன்றிடின்
முந்திய தடுத்திட
மூலையில் விடுத்திடச்
சந்திப்போம் போரென்றார்
தடந்தோள்கள் கோடியென்றார்!
சிந்திப்போம் தமிழ்மொழியைத்
தீண்டவரும் எதுவெனினும்
கொந்தளிப்போம்
வெந்தழிப்போம்
கொள்கையது
வென்றெடுப்போம்!

பெரியாரும் அண்ணாவும்
கலைஞர்பே ராசிரியர்
இருந்தவர் நாவலர்
எல்லோரும்
திராவிடத்தின்
வருங்காலம் இவர்பாட்டில்
வண்டமிழாய் வாழுமெனப்
புரட்சியைப் போற்றினர்
புத்தெழுச்சித்
தளபதியும்
மருட்சியின்றி இவர்பாட்டை
மனங்கொண்டு
செல்கின்றார்;
மிரட்சிவரும் போதெல்லாம்
வெற்றிதரும் இவர்பாட்டு!
திரட்சியாய் இருக்கின்ற
திரியுள்ள அதிர்வேட்டு!

காலத்திற்கு ஒருகவிஞர்
காவிரி பாய்தமிழ்
ஞாலத்திற்கு என்றெழுந்த
நம்புரட்சிக் கவிஞரவர்
நீலத்து வானம்போல்
நிறைநீரின் நெடுங்கடல்போல்
மேலொத்த காற்றுப்பொல்
மீதெழும் தீயைப்போல்
காலத்தும் வாழ்கவே
கருத்தெழும் பிறந்தநாள்!

---

## திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் - 2 சட்டமன்றத் தொகுதிகளில்

# கழக - கூட்டணி வேட்பாளர்களுக்காக தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



திருவள்ளூர் ஏப்ரல் 29:

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஆவடி மற்றும் பூவிருந்த வல்லி 2 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டி யிட்ட கழக கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக் காக இரவு பகல் பாராமல் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவ ருக்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கோடானு கோடி நன்றியை மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஆவடி சட் டமன்றத் தொகுதியில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் (ஆவடி சா.மு. நாசர்) தி.மு. கழக வேட்பா ளராக போட்டியிட்டேன். பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதியில் கழக வேட்பா ளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகி யோர் உதயசூரியன் சின் னத்தில் போட்டியிட் டோம் வெற்றிக்காக இரவு பகல் பாராமல் தேனீக் களை போல சுறுசுறுப்பாக பணியாற்றிய திருவள்ளூர் மத்திய மாவட்ட அடங் கிய தி.மு. கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிக ளின் நிர்வாகிகள் உள் ளிட்ட ஒட்டுமொத்த நிர் வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சில் நிறைந்த நன்றிகளை தெரி வித்து மகிழ்கிறேன்

அதேபோல் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகரஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு, கிளைக் கழ கச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அனைத்து அணிகளின் நிர் வாகிகள் மற்றும் மதசார் பற்ற கூட்ட ணிக் கட்சிக ளின் ஒட்டு மொட்டு நிர்வா கிகள், கழகத்தில் எந்தவித பலனையும் எதிர்பார்க்கா மல் இரவும் பகலும் பாரா மல் அரும்பணியாற்றிய கழ கத்தினர் உயிர் நலமான அடிமட்ட தொண்டர்கள் ஆவடி மற்றும் பூவிருந்த வல்லி தொகுதிகளில் வாக் காளர் உள்ளிட்ட அனைவ ருக்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் கோடான கோடி நன்றி களை தெரிவித்துக்கொள்கி றோம்.

இவ்வாறு அமைச்சர் ஆவடி சாமு நாசர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள்

# நம் முதல்வரின் சாதனைகளைச் சொல்லும்! மே 4 ல் வெல்வார் - புதிய வரலாறு படைப்பார்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் உறுதி!



சென்னை, ஏப். 29-

தமிழர் நெஞ்சங்களில் தவிர்க்க முடியாத தலைவரா கத் திகழும் நம் முதல்வர் அவர்களின் உன்னத உழைப் பினால் தமிழ்நாட்டில் நிறை வேறியுள்ள திட்டங்கள் வர லாறு சொல்லும் மே 4 ல் வென்று காட்டுவார்! உதயசூ ரியன் உதிக்கும் உதிரிகள் உதி ரும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டு ள்ளார்

அவரது அறிக்கை வரு மாறு:

உழைப்பால் உயர்வு, பண் பான பேச்சு மக்களோடு மக் களாக திகழ்கி றார் நம் முதல் வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நம் தளபதி தமிழ்நாட்டு அர சியலில் மட்டும் அல்ல, தேசிய அரசியலிலும் தனக்கென்று ஓர் இடத்தை உறுதி செய்தி ருக்கிறார். தமிழ் நாட்டின் கல்வி மற்றும் தொழில் வளர்ச் சியில் முன்னேற்றம் அடைந்த நம் மாநிலத்தை மற்ற மாநிலத் தலைவர்கள் அத்திட்டத்தை பின்பற்றி வருகிறார்கள். பெண்கள்,முன்னேற்றம் புத் தக வாசிப்பு அதிகரிப்பு, போன்ற பல சிறப்புகளை வியந்து பார்க்கிறார்கள். இந்த தேர்தலில் நம் தளபதி வெற்றி பெறுவதோடு மட்டும் இல் லாமல், தமிழ் நாட்டை பின் னோக்கி கொண்டு செல்லும் தவறுதலான அரசியலை நிரா கரிப்போம்.

தமிழ் மக்களின் நெஞ்சங்க ளில் தவிர்க்க முடியாத தலை வராவார். சுதந்திர போராட் டத்தில் ஈடுபட்ட மண் இது, பெரியார், அண்ணா,தமிழின தலைவர் கலைஞர் பிறந்த மண். திராவிட இயக்கங்கள் கொடுத்த உரிமைகளை தமிழ் நாட்டு மக்கள் மறக்க முடி யுமா? சமத்துவம் இருந்திருக் காது, மொழிப்பற்று இருந்தி ருக்காது, நாம் தமிழ் நாடு என்று அழைக்கும் சொல் லிற்கு சொந்தக்காரர் நம் திரா விட தலைவர்கள்.

இப்போது ஒன்றிய அர சின் அடக்கு முறையை ஒடுக்கி, மதவாத சாயம் இல் லாமல் எந்த சூழ்நிலையிலும் நம் உரிமைகளை காப்போம் என்று நம்பிக்கையை உணர்த்தி மக்களின் காவல னாக,கவசமாக, நான் உங்களு டன் என்றும் மனதில் நிற் பேன் என்று விமர்சன ங்களை அடித்து நொறுக்கினார் நம் தளபதி.

1) டங்ஸ்டன் சுரங்கம் பிரச்சனையில் நான் இருக்கும் வரை இந்த திட்டத்தை வர விட மாட்டேன் என்று குரல் கொடுத்து சொல்லி வச்சி செய்தார்.

2) திருப்பரங்குன்றம் விவ காரத்தில் நாங்கள் “விளைவு களை சந்திப்போம்” என்று அரசாங்கத்தின் குரலாக ஒலித் தார்.

3) தொகுதி மறுவறையரை விவகாரத்தில் தளபதி கை யாண்ட விதம் சிறப்பானது.

நகலை எரித்து வரலாறு படைத்தார்.

எல்லா மாவட்டத்திலும் டய்டல் பார்க், மற்றும் ஸ்மார்ட் சிட்டி அமைத்தார். எல்லா நகரங்களிலும் நவீன பேருந்து நிலையம் அமைத்து மக்கள் மனதில் பாராட்டு பெற்றார்.

மதுரையில் கலைஞர் நூல கம் பல் நோக்கு மருத்துவ மனை, ஜல்லிக்கட்டு மைதா னம் என்று அரசியல் நோக்கத்திற்காக போட்ட திட்டம் இல்லை. வாக்கிற்கா கவும் இல்லை மக்களுக்கா வும், தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டமாக மட்டுமே. நம் தமிழ் மண்ணுக்கு நம் சமூகத் திற்கு தரமான தலைமுறைகள் தேவை.

மனித நேயமிக்க நம் தள பதி வெல்வார். இத்தலை வனை நம் தமிழ்நாடுபெற்ற வரம்.வெற்றி முழங்க சூரியன் உதிக்கும் உதிரிகள் உதிரட் டும்

வாழ்க திராவிடம். வாழ்க தளபதி.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---




பி.எஸ்.அப்துல்ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவன தமிழ்த்துறையும் கவிஞர் ஆலந்தூர் மோகன ரங்கன் தமிழியல் ஆய்வு மையம் மற்றும் ரசியா தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய ‘நவீன இலக்கியங்கள் பன்னாட்டுப் பார்வை’ எனும் கருத்தரங்கம் நேற்று (28.4.2026) நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ராதிகா மேகநாதன் வரவேற்புரையில் துணைவேந்தர் முனைவர் ஏ.பீர் முகமது தலைமையுரையில், நா.ராஜா உசேன் முன்னிலையில், பேரா.கான்ஸ்டன்டைன் ரவிந்திரன் எம்.பி., மேனாள் நீதியரசர் அக்பர் அலி சிறப்புரை ஆற்றினர். இதில் இணை துணைவேந்தர் என்.தாஜீதீன், ஈராக் தமிழ்ச் சங்கத் தலைவர் சாதிக் பாஷா, முனைவர் அயூப்கான் வாழ்த்துரை வழங்கினர். மோ.பாட்டழகன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் த. ஆறுமுகம்
### ஏப்ரல் 29 (2017)



கழகம் துவங்கிய நாள் இரவே தனது கிராமத்தில் கழகக் கொடியேற்றிய இவர், வெங்கடரமணபுரம் கிளைக் கழகப் பொருளாளராக தனது கழகப் பணியை துவங்கி, கிளைக் கழகச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, கழக முதல் மாநில மாநாடு முதல் விருகம்பாக்கம் மாநாடு வரை தொண்டர் அணியில் சேர்ந்து பணியாற்றியவர்.

தாமரைக்குளம் ஊராட்சி மன்ற தலைவராகவும் – அரியலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் – அரியலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக 1977, 1980, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மிசா நெருக்கடி காலத்தில் தலைவர் அவர்களை அரியலூருக்கு அழைத்து வந்து அம்பாள் திரையரங்கில் சிறப்புக் கூட்டம் நடத்தி தலைவரின் நன்மதிப்பை பெற்றவர். கழகத்திற்கு சோதனை ஏற்பட்ட காலங்களில் எல்லாம் தலைவர் “கலைஞர்” ஒருவரையே தலைவராக ஏற்றுக் கொண்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**